ආයතනයේ නම :- උපරිමාධිකරණ විනිශ්චයකාරවරුන් - ශීර්ෂ අංක 04
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද
වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ
නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

நிறுவனத்தின் பெயர் :- உயர் நீதிமன்ற நீதியரசர்கள் – செலவினத் தலைப்பு 04
பாராளுமன்ற அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை
தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின்
அவதானிப்புக்கள் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை
பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்.

Name of the Institution : Judges of the Superior Court – Head 04
Submission of observations of Hon.Minister and steps taken with regard to the reports tabled by the committee on public Accounts in terms of standing order No.119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல – 183

நிறுவனத்தின் பெயர் - உயர் நீதிமன்ற நீதியரசர்கள்

நிதியாண்டு – 2020

| | குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | பலவீனங்களை தவிர்ப்பதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 01. | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை. | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதியுடைய 1/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டுக்கு தயார்செய்த வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் 2021.03.03 ஆம் திகதி நீதி அமைச்சின் அரச கணக்காய்வுக் கிளைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 02. | ஒதுக்க வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்க வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை 2022 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. |
| 03 | 2002.09.12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்று நிருபத்திற்கேற்ப ஒரு நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயார்செய்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் வருடத்திற்கான செயலாற்றுகை அறிக்கையை 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று காரணமாக பூரணப்படுத்த முடியவில்லை. என்றாலும், 2022 ஜுன் மாதமளவில் குறித்த அறிக்கையைத் தயார்செய்து 2022 நவம்பர் மாதத்தில் பாராளுமன்றத்திற்கு கையளிக்கப்பட்டது. |
| 04. | பணியாட் தொகுதியின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எழுத்து மூலமான கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இது வரையில் கடமைப் பட்டியல் வழங்கப்படாதிருந்த உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் கடமைகளைச் சாட்டுவதற்கு நடடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 05. | 04/2017 ஆம் இலக்க 2017.09.20 ஆம் திகதியுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்திற்கு அமைவாக ஒவ்வொரு காலாண்டும் நிறைவடைந்து ஒரு மாத காலத்தினுள் பணியாட் தொகுதி தொடர்பான விபரங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு காலாண்டும் நிறைவடைந்து ஒரு மாத காலத்தினுள் பணியாட் தொகுதி தொடர்பான விபரங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தற்போது சமர்ப்பிக்கப்படுகின்றது. |

2023.01.23 ஆம் திகதி

உயர் நீதிமன்றத்தில்

பதிவாளர் - உயர் நீதிமன்றம்

Pradeep Mahamuthugala
Additional Magistrate
Registrar
Supreme Court
Colombo - 12,
Sri Lanka.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல – 183

நிறுவனத்தின் பெயர் - உயர் நீதிமன்ற நீதியரசர்கள்

நிதியாண்டு – 2020

| | குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | பலவீனங்களை தவிர்ப்பதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 1. | தகவலறியும் சட்டத்திற்கு அமைவாக தனது நிறுவனத்தின் தகவல்களை வழங்குவதற்கென குறிப்பிட்டதொரு உத்தியோகத்தரை நியமிக்காமை. | தகவலறியும் சட்டத்திற்கு அமைவாக 234 ஆம் செலவினத் தலைப்பினைக் கொண்ட உயர் நீதிமன்றப் பதிவாளர் திணைக்களத்திற்கு, தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாலும், அது உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு பொருந்தாது. |
| 2. | பொது மக்களால் கோரப்படும் தகவல்களை வழங்குதல்/ வழங்கப்படாமை தொடர்பிலான விபரங்களை உள்ளடக்கி ஒரு பதிவேடு பேணப்படவில்லை. | பொருந்தாது. |
| 3. | கோரப்படும் தகவல்கள் வழங்கப்படாமை குறித்து முன்வைக்கும் முறைப்பாடுகளை ஆவணப்படுத்துதல் மற்றும் அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தெளிவுபடுத்தும் ஆவணம் பேணப்படவில்லை. | பொருந்தாது. |
| 4. | 2018/02 ஆம் இலக்க 2018.01.24 ஆம் திகதியுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கேற்ப உரிய முறையில் மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கௌரவ பிரதம நீதியரசர் உள்ளடங்கலாக உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேதகு சனாதிபதியினால் நியமனம் செய்யப்படுவதால் உயர் நீதிமன்ற பதிவாளருக்கு அது தொடர்பாக செயற்பட முடியாது. |
| 5. | தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்தின் மூலம் ஒரு உத்தியோகத்தருக்கு வருடத்துக்கு குறைந்தபட்சம் 12 மணித்தியால மேலதிக பயிற்சிகள் ஒதுக்கப்படாமை. | கொவிட் தொற்று காரணமாக வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்க முடியவில்லை. |
| 6. | சகல பணியாட் தொகுதியினரையும் உள்ளடக்கி செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு உடன்டிக்கை செய்திருக்காமை. | பொருந்தாது. |
| 7. | மனித வள அபிவிருத்தி திட்டத்தைத் தயாரிக்கவும் இயற்றிறன் மற்றும் ஆற்றல் விருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை. | பொருந்தாது. |
| 8. | திட்டமிட்ட பயிற்சி வாய்ப்புக்களுள் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் 50 சதவீதத்தினை விட குறைவாக இருந்தது. | கொவிட் தொற்று நிலைமையினால் பயிற்சி வாய்ப்புக்கள் இருக்கவில்லை. |

2023.01.23 ஆம் திகதி

உயர் நீதிமன்றத்தில்

பதிவாளர் - உயர் நீதிமன்றம்

Pradeep Mahamuthugala
Additional Magistrate
Registrar
Supreme Court
Colombo - 12,
Sri Lanka.